بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜும்ஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜும்ஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 7 March 2014 (Tamil)**

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் யூ. கே வின் நூற்றாண்டு விழா

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

பிரித்தானியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத் தோன்றி 100 ஆண்டுகள் முழுமையடைந்ததையொட்டி யூ.கே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் 3 வாரங்களுக்கு முன் ஒரு விழாவைக் கொண்டாடியது. அதில் பல்வேறு மார்க்கங்களின் அறிஞர்கள் அல்லது பிரதிநிதிகள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டன. அவர்கள் தத்தமது புனித வேதங்களை அடிப்படையாகக் கொண்டு இறைவன் மற்றும் மார்க்கத்தைப் பற்றிய சிந்தனையை எடுத்து வைக்குமாறும், 21-ஆம் நூற்றாண்டில் இறைவனின் பண்புகள் என்ன? இறைவனின்தேவை என்ன? என்பதைப் பற்றி எடுத்து வைக்குமாறும் கூறப்பட்டது. எப்படி இருந்தாலும், இதில் இஸ்லாத்தின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியிருந்தது. அதுவும் ஜமாஅத்துதான் பொறுப்பேற்றிருந்தது. இது தவிர யூத, கிறித்தவ, புத்த, **Druzes**, (தரூஸீ - சிரியாவிலுள்ள ஓர் அரசியல் பிரிவினர்) மற்றும் ஹிந்து ஆகிய மார்க்கங்களின் பிரதிநிதித்துவமும் இருந்தது. அவர்கள் தத்தமது சிந்தனைகளை எடுத்துரைத்தனர். மேலும் ஜொராஸ்டரிஸம் மற்றும் சீக்கியர்களின் பிரதிநிதித்துவமும் இருந்தது. பஹாயியும் இருந்தனர். அது மட்டுமின்றி அரசியல்வாதிகள், **Human Rights**(மனித உரிமை அமைப்பு)ன் பிரதிநிதிகளுக்கும் தமது சிந்தனைகளை எடுத்துரைக்க வாய்ப்பளிக்கப்பட்டது. மேலும் இந்த விழா இங்கிலாந்திலுள்ள மிகப் பெரும் பழமை வாய்ந்த மரபுசால் அரங்கமாகிய **Guildhall** (கில்டு ஹால்) - ல் நடைபெற்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

நடைபெற்ற மாநாட்டைப் பற்றிய சில விஷயங்களைக் கூறுவதே தற்போது எனது நோக்கமாகும். ஜும்ஆ பேருரையை மக்கள் அதிகம் கேட்கின்றனர். எனவே இதில் அது பற்றி சுருக்கமாக குறிப்பிடுவது சிறந்ததுதான். எனினும் இந்த நிகழ்ச்சி **MTA** - வில் ஒளிபரப்பப்பட்டுள்ளது. அதை அஹ்மதிகள் பார்க்கவேண்டும்; அதிலிருந்து முழுமையாக பலன் பெற வேண்டும். அதுவே சிறந்ததாகும். பயன் பெறத்தக்க நிகழ்ச்சியாகும் அது. தற்போது நான் அதன் சுருக்கத்தையும், சொற்பொழிவாளர்களின் ஒரு சில கூற்றுகளையும் எடுத்துரைப்பேன்.

ஓர் இந்து கவுன்சிலின் சேர்மேன் **Humesh Chander sharma** (ஹுமேஷ் சந்தர் ஷர்மா) என்பவர் கூறுகிறார்:

‘‘இன்றைய தலைப்பு மிகவும் ஆர்வமூட்டக் கூடியதாகும். இதிலிருந்து, இந்த அண்ட சராசரங்களைப் படைத்த ஓர் இறைவன் இருக்கிறான் என்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறோம் என்பது நிரூபணமாகிறது. இன்னொரு மிகத் தெளிவான விஷயம், அரசியல் தலைவர்கள் மற்றும் பிற அமைப்புகள் உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றி காண முடியவில்லை; நாலாப்புறமும் சண்டையும் குழப்பமும் பரவிக் கிடக்கின்றன. அரசியல்வாதிகளிடம் பொது மக்களுக்கு இருந்த நம்பிக்கை போய் விட்டது. எனவே நாம் மனித குலத்தின் மேம்பாட்டிற்காக மீண்டும் மார்க்கத்தின் பக்கம் திரும்ப வேண்டிய நேரம் வந்து விட்டது என நினைக்கிறேன்.’’

பிறகு தலாயிலாமா அவர்களின் தூதுச் செய்தியையும், இங்கு இலண்டனிலுள்ள புத்த மத தலைவர் ஆகியோரின் பிரதிநிதித்துவத்தில் அவர்களின் தூதுச் செய்தியைப் படித்தனர். அவர்கள்

தமது தூதுச் செய்தியில்,'அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக பிரித்தானியாவில் 11 பிப்ரவரி 2014 அன்று உலகளாவிய மார்க்க மாநாடு நடத்தப்படுவதை அறிந்தேன். ஜமாஅத்தின் இந்த தைரியமான செயலைப் பாராட்டுகிறேன். இந்த மாதிரியான மாநாடுகள் தொலைதூர நல்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன என்பதை நான் அறிவேன்எனக் கூறினார்.

பிறகு **Druzes**, (தரூஸீ - சிரியாவிலுள்ள ஓர்அரசியல் பிரிவினர்) கம்யூனிட்டியின் தலைவர் ஷேக் மவ்ஃபிக் சாஹிப் கூறுகின்றார்:

'' என்னை இந்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் அவர்களுக்கும் ஜமாஅத்திற்கும் நான் மிக்க நன்றியுடையவனாவேன். மேலும் பிரித்தானியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத் தோன்றி 100 ஆண்டுகள் நிறைவடைந்த மகிழ்ச்சியில் கொண்டாடப்படுகின்ற இந்த மகத்தான மாநாட்டிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்களின் தரூஸ் கம்யூனிட்டியின் புனிதத் தலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் நட்பு ரீதியான ஓர் ஒற்றுமை இருக்கிறது. உங்களின் சார்பாக எங்களுக்கு அழைப்பு கிடைத்ததில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. வாருங்கள். நாம் அனைவரும் இணைந்து அநீதியையும் அநியாயத்தையும் வெறுத்து ஒதுக்குவோம். மேலும் அன்பின் விதையை தூவுவோம். அதன் மூலமாக மேற்கில் மட்டுமின்றி முழு உலகிலும் அன்பின் நீரூற்றுகள் பெருக்கெடுத்து ஓடட்டும்.''

பிறகு கத்தோலிக சர்ச்சின் பிஷப் **Kevin Mc Donald** (கேவின் மக் டோனல்டு என்பவர் கூறுகிறார்:

''எனக்கு இந்த சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டதிலும், கத்தோலிக்க சர்ச்சின் பிரதிநிதித்துவத்தில் எனது சொற்பொழிவை எடுத்துரைத்திருப்பதிலும் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் உலகிற்கு இந்த மாதிரியான மாநாடுகளின் தேவை அதிகம் இருக்கிறது.''

அதற்குப் பிறகு அவர் போப் கேபினெட்டின் தலைவர் திரு **Cardianal Peter Turkson** (கார்டியனல் பீட்டர் டர்க்ஸன்) என்பவரின் தூதுச் செய்தியைப் படித்துக் காட்டினார். அது மட்டுமின்றி சில அரசியல் தலைவர்களின் சொற்பொழிவுகளும் தூதுச் செய்திகளும் இருந்தன.

கானா நாட்டின் தலைவர் அவர்களின் தூதுச் செய்தியை ஓர் உயர் ஆணையர் படித்துக் காட்டினார். பின்னர் இங்குள்ள **Baroness Warsi** ( பாரோனஸ் வார்ஸீ) ஸயீதாசாஹிபா அவர்களும் வந்திருந்தார். அவர்கள் கூறுகையில், 'இந்த மகத்தான அரங்கத்தில் அனைத்து சமய மாநாட்டிற்காக ஒன்று கூடியிருக்கின்ற கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கு முன் நான் எனது கருத்துகளை வெளிப்படுத்துவது எனக்கு கண்ணியத்திற்குரியதாக இருக்கிறது. இந்த மாநாடு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பரந்த தைரியத்தையும், பரந்த மனப்பான்மையையும், பரந்த பார்வையையும், உயர்ந்த மனப்பக்குவத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. நீங்கள் எத்தகைய உலக அளவிலான விழாவை நடத்தி இருக்கிறீர்கள் என்றால், அதில் நீங்கள் உங்கள் ஜமாஅத்தின் சிந்தனைகளை எடுத்து வைத்திருப்பதுடன் நின்று விடாமல், அனைத்து மர்க்கத்தைச் சார்ந்த பிரதிநிதிகளையும் தத்தமது கொள்கைகளை எடுத்து வைப்பதற்கு அழைப்பு விடுத்திருக்கிறீர்கள். பிரித்தானியாவின் நாலாப்புறத்திலும் மனிதத்துவத்தின் அடிப்படையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக செய்யப்பட்ட நன்மையான பணிகளின் நல்விளைவுகள் தென்படுகின்றன. மேலும் உலகெங்கிலுமுள்ள மார்க்கங்கள் ஒன்றாக அமர்ந்து அனைத்துலக ஒற்றுமையின் பக்கமும் ஒருமைப்பாட்டின் பக்கமும் காலெடுத்து வைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றன என்பதையும் வெற்றிகரமாக நடைபெற்ற இந்த மாநாடு நிரூபிக்கின்றது' எனக் குறிப்பிட்டார். மேலும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும் என்று கூறினார்.

அமெரிக்காவின் **Commission on International Relegious Freedom**(கமிஷன் ஆன் இன்டர் நேஷனல் ரிலீஜியஸ் ஃப்ரீடம்) அமைப்பின் வைஸ் சேர்மேன் **Dr.Ketrina Lantos Swett** (டாக்டர் கேட்ரீனா லான்டாஸ் ஸ்வெட்) என்ற பெண்மணிக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் நீண்ட கால தொடர்பு இருக்கிறது. அவர் கூறுகிறார்: ''இன்று உங்களுடன் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு எனக்கு கிடைத்திருப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியையும் கண்ணியத்தையும் உணர்கிறேன். பிரித்தானியாவில் உங்களின் ஜமாஅத் நிலைபெற்று 100 ஆண்டுகள் நிறைவடைந்த சந்தர்ப்பத்தையொட்டிய இந்த மாநாட்டில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். மேலும் இன்றைய

மாநாடு ஒருவருக்கொருவர் ஒற்றுமை, ஒருமைப்பாடு, மத நல்லிணக்கத்தின் உயர்ந்த மதிப்புகளைப் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றிற்காக நடத்தப்பட்டிருக்கிறது. மேலும் உண்மையில் இந்த பண்புகள்தான் உங்கள் ஜமாஅத்தின் அடிப்படையான கொள்கைகளாக இருக்கின்றன.''

பிரித்தானியாவின் பிரதமரின் தூதுச் செய்தியை இங்குள்ள **Attorney general Right** (அடார்னீ ஜெனரல் ரைட்) கண்ணியமிக்க **Dominic Grieve** (டாமினிக் கரேவ்) என்பவர் படித்துக் காட்டினார். அதற்கு முன் அவர் தன் சார்பாக சில விஷயங்களைக் கூறினார். அவர் கூறுகையில்,'இன்றைய இந்த மாநாடு ஒரு தனிச் சிறப்பான மாநாடாகும். நான் கிறித்தவன் என்ற முறையில் எனது அநுபவம் என்னவென்றால், மார்க்கமில்லாதவரை விட ஏதாவதொரு மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருப்பவரால்தான்பிற மார்க்கங்களை ஏற்றுக் கொள்பவர்களின் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் மிகச் சிறந்த முறையில் புரிய முடியும்.

அதன் பிறகு அவர் பிரதமரின் தூதுச் செய்தியைப் படுத்துக் காட்டினார். அந்த தூதுச் செய்தியில் பிரதமர்,' உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக பல்வேறு மார்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை ஒரே மேடையில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்று சேர்த்திருப்பதற்காக நான் அதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கிலாந்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வரும் நிகரற்ற தொண்டுகளை பாராட்டுகிறேன். நீங்கள் ஒரு பக்கம் நாடு தழுவிய அளவில் அனைத்துலக மாநாடுகளை நடத்துகின்றீர்கள் என்றால் மறு பக்கம் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது துன்பப்பட்ட மக்களுக்கு உதவிகளை செய்கின்றீர்கள்.''

(ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் அருளினால் அப்போது குத்தாமுல் அஹ்மதிய்யா அதிகமான பணிகளை செய்தது.)

''மார்க்கங்களுக்கு மத்தியில் மகிழ்ச்சியான தொடர்புகளை உருவாக்குவதைப் பொருத்தவரை இன்று நடைபெறுகின்ற இந்த மாநாடு, பல்வேறுபட்ட மார்க்கங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக அமர வேண்டும்; முழு உலகமும் அமைதிக்கூடமாக மாற வேண்டும் என்ற உங்கள் கொள்கையில் நீங்கள் எவ்வளவு மிருதுவானவர்களாக இருக்கிறீர்கள் என்பதற்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மாநாட்டில் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதித்துவமும் இருப்பதை அறிந்து எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம், மற்ற மார்க்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் மற்ற விருந்தினர்கள் ஆகியோருடன் ஒன்றாக சேர்ந்து பல்வேறு மார்க்கங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு உலகத்தில் அமைதியை நிலை நாட்டுவதில் எவ்வாறு தனது பங்கை ஆற்ற முடியும் என்பதைப் பற்றி சிந்திப்போம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

பிறகு இங்கிலாந்து பேராலயத்தின் தலைவியாகிய மகாராணியின் தனிச் செயலர், 'இங்கிலாந்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் 100 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு **Guildhall** (கில்டு ஹால்) -ல் ஒரு மகத்தான அனைத்துலக மார்க்கங்களின் மாநாடு கொண்டாடப்படுவது பற்றிய செய்தி மகிழ்ச்சிக்குரியதாகும். இந்த மாநாட்டின் குறிக்கோளை அறிந்து மகாராணிக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. நீங்கள் அழைப்பு விடுத்திருப்பதற்கு மிக்க நன்றியுள்ளவராக இருக்கிறார். இந்த மாநாடு உங்கள் அனைவருக்கும் வெற்றிகரமானதும்,நினைவுச் சின்னமாக இருக்கும் அளவிலான மாநாடாக அமையட்டுமாக என மனமாற விருப்பம் கொண்டிருக்கிறார்' என எழுதி இருந்தார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் அந்த மாநாட்டில் கூறிய விஷயங்கள் பற்றியும் அது பற்றி மற்றவர்களின் தாக்கங்களைப் பற்றியும் தற்போது சுருக்கமாகக் கூறுகிறேன்.

மனிதர்கள் சீர்திருந்த வேண்டும் எனவும், மனிதன் இறைவனின் உரிமைகளையும் நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும்; அவனது படைப்பினங்களின் உரிமைகளையும் நிறைவேற்றுபவனாக இருக்க வேண்டும் எனவும் அல்லாஹ் விரும்புகிறான். மேலும் இந்த நோக்கத்திற்காகவே அல்லாஹ் நபிமார்களை அனுப்புகிறான். நபிமார்களின் விஷயங்களைக் கேட்பவர்கள் வெற்றி பெறுகின்றனர்; மறுத்தவர்கள் தீய விளைவை அடைந்தனர். அடுத்து நான் கூறியது என்னவெனில், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழு உலகத்தையும் சீர்திருத்துவதற்காக அனுப்பினான். அப்போது அவர்கள் அதனைப் பெறுவதற்காக தப்லீகை அதன் இறுதி எல்லை வரை கொண்டு சென்றார்கள். தப்லீக் மட்டும் செய்யவில்லை; மாறாக, அதன் விளைவைப் பெறுவதற்காகவும், மக்களின் உள்ளங்களையும் இதயங்களையும் திறப்பதற்காகவும் அன்னாரின் சஜ்தா செய்த இடம் கண்ணீரால் நனைந்து விடும் அளவுக்கு

இரவுகளில் துஆக்களை செய்தார்கள். மக்களை சீர்திருத்துவதற்காகவும் அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் அன்னாரின் உள்ளத்தில் இருந்த வேதனையை சொல்லில் எடுத்துக் கூறி விட முடியாது. எல்லாவிதமான தீமைகளிலும் மூழ்கியிருந்த அந்த மக்களை அன்னார் (ஸல்) அந்த தீமைகளிலிருந்து விடுவித்து நல்லொழுக்கமுள்ள, இறைதொடர்பு கொண்ட மக்களாக மாற்றினார்கள். இத்தகைய மாற்றத்தை எந்தவோர் உலக ஆற்றலும் செய்ய முடியாது. இது துஆக்களைக் கேட்கின்றவனும், உள்ளங்களின் மீது ஆதிக்கம் கொண்டிருப்பவனுமாகிய அந்த கலப்பற்ற இறைவனின் செயலாகும்.

பிறகு நான் கூறியதாவது, எதிரிகளுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதிலும் அன்னார் (ஸல்) எப்படிப்பட்ட முன்மாதிரியை நிலைநாட்டினார்கள் என்றால், அதற்கு நிகரானதை உலக விவகாரங்களில் எங்கேயும் காண முடியாது. மக்காவில் பகைமையை அதன் இறுதி எல்லை வரை எட்டச் செய்திருந்த கடுமையான எதிரிகளை மக்கா வெற்றியின்போது, அவர்கள் எந்தவித தவறும் தீங்கும் செய்யாததைப் போன்று அன்னார் (ஸல்) மன்னித்து விட்டார்கள். இஸ்லாத்தின் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் கடுமை காட்டுதல் மற்றும் போர்கள் பற்றி குற்றம் சாட்டப்படுவது - இன்றைய காலத்திலும் இந்த உலகத்தில் குற்றம் சாட்டப்படுகிறது - இது வரலாற்று உண்மைகளைப் பற்றிய அறியாமையின் விளைவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்களில் ஒருபோதும் முதலில் இறங்கவில்லை. மேலும் நான் கூறியதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநராக வந்துள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் உண்மையான இஸ்லாத்தின் போதனையை நிலைநாட்டி விட்டார்கள் என நானும் அஹ்மதிய்யா ஜமாஅத்தும் நம்புகிறது. அவர்கள் உண்மையான இஸ்லாத்தின்படி செயல்படுகின்ற, செயல்பட முயற்சி செய்கின்ற ஒரு ஜமாஅத்தை உருவாக்கிச் சென்றுள்ளார்கள். மேலும் நான் கூறியது என்னவென்றால், இஸ்லாத்தின் ஒளியை உயிர் பெறச் செய்ய வந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் அல்லாஹ்வின் உதவி, ஆதரவுகள் இருக்கின்றன. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர், ‘இறைவனின் விஷயங்கள் ஒரு பழைய கதைகள் அல்ல; மாறாக, அல்லாஹ் இன்றும் உயிருடன் இருக்கின்றான்; மேலும் தனது நல்லடியார்களுடன் பேசுகின்றான்; அடையாளங்களைக் காட்டுகின்றான் ஆகிய ஞானத்தை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். எனவே உலகம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அது தனது தவறுகளின் குற்றத்தை இறைவன் மீதும், மார்க்கத்தின் மீதும் சுமத்த வேண்டாம்; மாறாக, தன்னிடம் அவர்கள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்’ எனக் கூறினார்கள். எனவே உலகம் இதன் படி செயல்படுவதற்கான வாய்ப்பினை இறைவன் வழங்குவானாக.

**Stein Villumstad** (ஸ்டீன் வில்லம்ஸ்டார்டு) என்பவர் ஐரோப்பிய மார்க்கத் தலைவர்கள் கவுன்சிலின் பொதுச் செயலர் ஆவார். அவர் கூறுகையில்,‘ இவ்விதமாக ஒன்று சேர்ந்து அமர்வதும், பல்வேறுபட்ட மார்க்கங்களை ஏற்றுக் கொள்பவர்கள், ஒருவர் மற்றவரின் விஷயங்களை தைரியத்துடன் கேட்பதும், பிறகு நாம் அனைவரும் அமைதியை விரும்பக் கூடியவர்களாக இருக்கிறோம் என ஒப்புக் கொள்வதும் ஒரு மிகப் பெரிய வெற்றியாகும்’ எனக் கூறினார்.

பிறகு இங்கிலாந்து கிரானடாவின் உயர் ஆணையாளர் **HE Joselyn Whiteman** (ஹீ ஜோஸ்லின் வைட் மேன்) என்பவர் கூறுகிறார்:

‘‘இது மிக அருமையான நிகழ்ச்சியாகும். இவ்வளவு அனைத்து மார்க்கங்களும் ஒரே அரங்கின் கீழ் இவ்வாறு ஒன்று சேர முடியும் என்பது நமது இறைநம்பிக்கையை அதிகமாக்குவதற்கு காரணமாக இருக்கிறது. இதிலிருந்து, இன்றைய உலக பிரச்சனைகளுக்கு தீர்வு காண மக்களை எப்படி ஒன்று திரட்ட முடியும் என்பதற்கான ஒரு கணிப்பு நமக்கு கிடைத்திருப்பதும் இதன் ஒரு பயனாகும்.’’

இலண்டனில் மெட்ரோ பொலிடன் போலீஸின் கமாண்டராக இருக்கும் **Mak Chishty** (மாக் சிஷ்டி) என்ற பெண்மணி கூறுகிறார்:

‘‘ எனக்கு இந்த நிகழ்ச்சியில் மிகவும் பிடித்தது, ஒவ்வொருவரும் மற்ற மார்க்கங்களைப் பற்றி விமர்சிக்காமல் தமது மார்க்கங்களைப் பற்றிய மேன்மைகளை மட்டுமே எடுத்துக் கூறினார்கள் என்பதுதான். மேலும் இதிலிருந்தே ஒருவருக்கொருவர் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பற்றிய உணர்வு நம்மிடம் உருவாகிறது.’’

ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்: இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

(அலை) அவர்கள் செய்யுமாறு (அன்று விக்டோரியா) மகா ராணிக்கு எழுதினார்கள். (அவ்வாறு பிற மார்க்கங்களை தாக்காமல் தமது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துரைக்குமாறு கூறினார்கள்.)

பிறகு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதிநிதியாகிய **Dr Charles Tannock MEP** (டாக்டர் சார்லஸ் டான்னோக் எம்.ஈ.பீ) கூறினார்:

''இனி எதிர்காலத்தில் இந்த வழியைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. நாம் அனைவரும் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். நாம் மார்க்கத்தின் பெயரில் இவ்வாறு ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பதை இறைவன் விரும்புகிறான் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது; எனவே அமைதியின் இந்த தூதுச் செய்திக்கு நான் மிக அழுத்தமாக ஆதரவு கொடுக்கிறேன். அஹ்மதிகளைப் பொருத்தவரை நான் மதிக்கத்தக்கதாகக் கருதுவது, அவர்களின் போதனைகளின் இரத்தினச் சுருக்கமாகிய 'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு' என்பதைத்தான். என்னைப் பொருத்தவரை இது உலகந்தழுவிய தூதுச் செய்தியாகும். எந்த அளவுக்கு பல்வேறுபட்ட மார்க்கங்கள் ஒன்று சேர்ந்து அமர முடியுமோ அந்த அளவுக்கு அது சிறந்ததாகும்.

பிறகு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் **APPG (All Party Parliamentary Group On International Feedom of Religoin** -ஆல் பார்டி பார்லிமென்டரி குரூப் ஏ.பி.பி.ஜீ ஆன் இன்டெர் நேஷனல் ஃப்ரீடம் ஆஃப் ரிலிஜன்) ன் சேர் மேன் ஆகிய Baroness Berridge (பாரோனெஸ் பெர்ரிட்ஜ்) என்ற பெண்மணி கூறுகிறார்: ''எனக்கு மார்க்க சுதந்திரத்தின் அனைத்து குழுவின் தலைவராக இருக்கும் கண்ணியம் கிடைத்திருக்கிறது. அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டு வருகிறது என்பதை நான் அறிவேன். இந்த விஷயத்தை ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தமது சொற்றொபொழிவிலும் குறிப்பிட்டார்கள். அஹ்மதிய்யா சமுதாயத்தின் பணிகளுடன் நாம் அவர்களுக்கு உதவி செய்கின்றோம் என்பதில் நமக்கு மிக்க மகிழ்ச்சி. மேலும் அஹ்மதிகளுக்கு இந்த நாட்டில் முழுமையான சுதந்திரம் இருப்பதிலும் நமக்கு மிக்க மகிழ்ச்சி.''

பிறகு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் **APPG (All Party Parliamentary Group On International Feedom of Religoin** -ஆல் பார்டி பார்லிமென்டரி குரூப் ஏ.பி.பி.ஜீ ஆன் இன்டெர் நேஷனல் ஃப்ரீடம் ஆஃப் ரிலிஜன்) ன் உறுப்பினரான **Kay Carter** (கே கார்டர்) என்பவர் கூறுகிறார்:

'' அன்பு, நல்லிணக்கம், அமைதி என்ற ஒரே விஷயம்தான் எல்லா மார்க்கங்களிலும் கூறப்பட்டிருக்கிறது என அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் கூறியிருப்பதே உண்மையாகும்; மனிதன் ஒருவரையொருவர் சண்டையிடுவதற்கு ஆகுமானதாகக் கொள்வதற்கான வழியை மார்க்கம் உருவாக்கிக் கொண்டிருப்பதாக உண்மையில் மீடியாக்களில் மார்க்கம் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையோ, நாம் இந்த நிகழ்ச்சியில் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று முற்றிலும் வேறுபட்டதாகும்.''

பிறகு இதே உயர் அதிகாரியின் இன்னொரு தூதுச் செய்தி இருந்தது. அதில் அவர், 'அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் தூதுச் செய்தி அமைதியையும்,சாந்தியையும், ஒருவரையொருவர் புரிந்து கொள்வதையும் பற்றியதாகும். உலகத்தின் எல்லா மார்க்கங்களும் ஒருவர் மற்றவர்களுடன் கருத்துப் பறிமாற்றம் செய்ய வேண்டும். ஏனெனில் நாம் அனைவரும் ஆதமின் சந்ததிகள் ஆவோம்; இறைவனின் படைப்புகள் ஆவோம். எனவே நாம் ஒருவர் மற்றவரின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். மேலும் சமாதானத்துடன் ஒன்றிணைந்து வாழ வேண்டும். நாம் ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக, நம்மால் இயன்ற அளவுக்கு சாந்தி, சமாதானத்திற்காக பாடுபட வேண்டும்' எனக் கூறினார்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் முன்னர் கூறியது போன்று இந்த விஷயத்தை ரப்பீ (யூத குரு) ஆகிய இவர் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கும் எடுத்துக் கூற வேண்டும்.

அடுத்து சன்தோக் சிங் என்ற ஒரு கவுன்சிலர் கூறுகிறார்:

''எல்லா மார்க்கங்களிலும் பல போதனைகள் ஒரே மாதிரியாக இருக்கின்றன என்பதையும், எல்லா உலக மார்க்கங்களும் மனித நேயத்தின் பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றன என்பதையும், நாம் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும் என்பதையும், ஒருவர் மற்றவருக்கு நன்மை செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்பதையும்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் நமக்கு புரிய

வைக்கின்றார்கள் என நான் கருதுகிறேன்.''

பிறகு நார்வேயைச் சேர்ந்த ஒரு அரசியல் கட்சித் தலைவர் **Billy Tranger, Christian Republic** (பில்லி ட்ரேங்கர், கிறிஸ்டியன் ரிபப்லிக்) கூறுகிறார்:

'' அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் தமது சொற்பொழிவின் இறுதியில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அமைதியை நிலை நாட்ட வேண்டும் என்ற மிகவும் முக்கியமான ஒரு தூதுச் செய்தியைக் கூறியிருக்கிறார்கள். என் கருத்துப்படி, இதுவே தற்போது உலகிற்கு அதிக தேவையாக இருக்கிறது. இந்தத் தூதுச் செய்தி எங்களின் நார்வேக்கும் மிகத் தேவையானதாகும்.''

ஆம்ஸ்டர்டம் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டாக்டர் **T. Sunier** (T. சுனீர்) கூறும்போது, 'இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள் தீவிரவாதத்திற்கு பதிலாக அமைதியை நிலை நாட்டுவதில் அழுத்தம் கொடுக்கிறது என்பதை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் மிகவும் தெளிவான சொற்களில் நிரூபித்து விட்டார்கள்' எனக் குறிப்பிட்டார்.

பிறகு, **Greek Orthodox Patriarch of Sntioch** (கிரேக் ஆர்தோடெக்ஸ் பாட்ரிஆர்ச் ஆஃப் ஆன்டிஆச்) அமைப்பைச் சேர்ந்த பாதிரி **Ethelwin** (எதெல்வின்) என்பவர், 'நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் தனிச் சிறப்பையும் அவர்களின் தூதையும் உள்ளத்தால் வாழ்த்துகிறேன். எப்போதும் போன்று இந்த மாநாட்டிலும் ஜமாஅத்தின் கலீஃபாவின் சொற்பொழிவே சிறந்த சொற்பொழிவாக இருந்தது. நிச்சயமாக பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஒன்று திரட்டுவதும், அவர்களிடமிருந்து அவர்களின் மார்க்கத்தைப் பற்றிய செய்தியைக் கேட்பதும் மிகவும் வீரம் மிக்கதும் மதிக்கத்தக்கதுமான முயற்சியாகும். இது ஒரு மிகப் பெரும் வெற்றியாகும்' எனக் கூறினார்.

அயர்லாந்திலிருந்து வந்திருந்த ஒருவர், ' நான் இந்த மாநாட்டில் கலந்து கொண்டேன்; எனக்கு இதில் கிடைத்த தூதுச் செய்தி என்னை உலுக்கி விட்டது. நான் அஹ்மதிகளுக்கு கூறிக் கொள்வது என்னவென்றால், இன்றைய காலத்தில் விளம்பரம் செய்யாமல் தனது தூதுச் செய்தியை பரப்புவது மிகவும் கடினமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த அளவுக்கு தொண்டுகளை செய்கிறது. ஆனால் நீங்கள் உங்களின் தொண்டுகளைப் பற்றி மிகச் சிறந்த முறையில் பகிரங்கப்படுத்தினால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன். ஏனெனில் உங்களைப் பற்றி உலகத்தில் கையளவு மக்களே அறிந்துள்ளார்கள்' எனக் கூறினார்.

ஐரோப்பியன் கவுன்சில் ஆஃப் ரிலீஜியஸ் லீடர்ஸ் அமைப்புடன் தொடர்புடைய ஜஹாங்கீர் சாரூ சாஹிப் கூறுகிறார்:

'' நான் மார்க்கத்தைப் பொருத்தவரை ஸெருஷ்தி ஆவேன். நான் இந்த விழாவினால் மிகவும் தாக்கத்திற்குள்ளாகி இருக்கிறேன். எல்லா சொற்பொழிவாளர்களும் நல்ல சொற்பொழிவை ஆற்றினார்கள். ஆனால் கடைசியில் ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு மிகவும் கருத்துச் செறிவுள்ளதாக இருந்தது.''

பிறகு மார்க்க போதனைகளின் ஆசிரியர் ராபன் ஹஸ்ஸி என்பவர் கூறுகிறார்:

'' இந்த சொற்பொழிவு இந்த அளவுக்கு ஆன்மீகத்தால் நிறைந்ததாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. நான் பல மார்க்கங்களின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கின்றேன். மேலும் நான் நிச்சயமாக வீட்டிற்கு சென்று இந்த விஷயங்களைப் பற்றி சிந்திப்பேன். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு சீக்கிரம் வெளியிடப்படும் என நம்புகிறேன்.''

பிறகு கதீட்ரலுடன் தொடர்புடைய **Canon Dr. Cane** (கேனான் டாக்டர் கேன்) என்பவர் கூறுகிறார்:

'' சில காலத்திற்கு முன் மார்க்கங்களின் தேவை இல்லை என மக்கள் கருதத் தொடங்கி விட்டனர். ஆனால் அது முற்றிலும் அடிபடையற்றது என்பது உறுதியாக நிரூபணமாகி விட்டது என நான் கருதுகிறேன்.''

பிறகு பெல்ஜியத்திலுள்ள ஆன்வெர்பென் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் லிடியா என்பவர் கூறுகிறார்:

‘‘அங்கு இரண்டு டக்டர்கள் வந்தனர்; இரண்டு பேரசிரியர்களும் வந்தனர். இரண்டு பேராசிரியர்களும்,‘ இஸ்லாத்தைப் பற்றியும், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களைப் பற்றியும் உண்மையான போதனைகளை சான்றாகக் கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு அவர்கள் மிகவும் தாக்கத்திற்குள்ளாயினர். மேலும் சொற்பொழிவைக் கேட்ட பிறகு திருக்குர்ஆனைப் படித்து இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை அறிந்து கொள்வதற்காக நாங்கள் பல்கலைகழகத்தில் எங்கள் மாணவர்களுக்கு திருக்குர்ஆனின் **Flamish** (பிளேமிய) மொழியாக்கத்தைக் கொடுப்போம் எனக் கூறினர்.’’

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இவ்வாறு அல்லாஹ்வின் அருளினால் தப்லீகிற்கான அதிக வழிகளும் திறந்துள்ளன.

ஸ்பெய்னிலிருந்து வந்திருந்த **Santiago Catala Rubio** (சன்திஆகோ கத்தாலா ருபியோ) என்பவர் மீடர்டு பல்கலைக்கழகத்தின் மார்க்கப் பேராசிரியர் ஆவார். இவர் பல நூல்களை இயற்றியுள்ளார். ஜமாஅத்துடன் இவருக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. 2012-ஆம் ஆண்டு ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும் இவர் வந்திருந்தார். என்னை சந்தித்தார். இவர் கூறுகிறார்:

‘‘ இந்த உலகளாவிய மார்க்கங்களின் மாநாட்டைப் பற்றி எனது சிந்தனகளையும், உணர்வுகளையும் நான் வெளிப்படுத்த ஆரம்பித்தால் இந்த மாநாட்டின் முக்கியத்துவம் மற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தூதுச் செய்தியின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதில் பல பக்கங்கள் நிறைந்து விடும். உலக வரலாற்றில் பல்வேறு மார்க்கங்கள் சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. இன்றைய காலத்திலும் மேற்கிலும் கிழக்கிலும் இஸ்லாம், கிறித்தவம், முன்னேற்றமடைந்த நாடுகள், முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கின்ற நாடுகள் ஆகியவற்றுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இந்த கருத்துவேறுபாடுகள் வெறுப்பையும், அநீதியையும், கொடுமையையும் அதிகப்படுத்துவதற்கு சாக்குப்போக்காக எடுத்து வைக்கப்படுகின்றன. ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முழக்கமாகிய ‘எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு’ என்பது எல்லா மார்க்கங்களின் சுருக்கமாகும். இந்த முழக்கம் உலகத்தின் எல்லா மார்க்கங்களையும், எல்லா மக்களையும் அவர்களின் கொள்கைகள், நிலைமைகள், சிந்தனைகள் ஆகியவற்றையெல்லாம் விட்டு அப்பாற்படுத்தி, ஒன்றிணைத்து விடுகிறது. முஸ்லிம்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் சண்டை, வெறுப்பு, அநியாயம், மற்றவர்களையும் தம்மையும் அபாயத்தில் போட்டுக்கொள்ளுதல், தமது மக்களையே தாக்குதல் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நடைமுறை மிகவும் முக்கியத்துவம் கொண்டதாக இருக்கிறது. எனவே இந்த மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு சமுதாயங்களில் மார்க்க அளவிலான, கொள்கை அளவிலான முழுமையான ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும்.’’

அடுத்து **Pedro Abad** (பேத்ரூ ஆபாத்) ஐ சேர்ந்த **Miguel Garcia** (மீகல் கார்ஸியா) என்பவர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார். இவர் மேயராகவும் இருந்திருக்கிறார்.இவர் தமது கலகட்டத்தில் சர்ச் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் 1980-ஆம் ஆண்டு மஸ்ஜிது பஷாரத் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருந்தார். மஸ்ஜிது பஷாரத் திறப்பு விழாவின்போது இவர் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களையும் சந்தித்திருந்தார். கலீஃபா அவர்கள் இவருக்கு ‘லாயிலாஹ இல்லல்லாஹ்’ என எழுதப்பட்டிருந்த ஒரு ஃப்ரேமை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். அதை இவர் தமது அலுவலகத்தில் பொருத்தி இருக்கிறார். இவர் ஜமாஅத்தின் பெரும் நல்ல தாக்கத்திற்குள்ளாகி இருக்கிறார். இவர் கூறுகிறார்:

‘‘ பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த குழுக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், கல்வி அறிஞர்கள், மனித அநுதாபம் காட்டும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் ஒற்றுமையையும், அமைதியையும் நிலைநாட்டுவதற்காக தேவையான கருத்துகளைக் கூறுவதற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக லண்டனில் ஒன்று திரட்டப்பட்டுள்ளனர். இது மிகவும் நல்ல விளைவை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். இந்த நிகழ்ச்சியை நடத்தும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஜமாஅத் தனது குறிக்கோளைப் பெறுவதில் வெற்றி பெறட்டும் என்பது எனது ஆசையாகும். எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூன்றாவது கலீஃபா அவர்களை பைத்ரோபாதில் 1981- ல்மஸ்ஜிது பஷாரத்திற்கான அடிக்கல் நாட்டும்போது சந்திக்கும் வாய்ப்பு

கிடைத்தது. பிறகு அதே பள்ளிவாயில் திறக்கும்போது 1982-ல் நான்காவது கலீஃபாவை சந்திக்கும் வய்ப்பு கிடைத்தது. இப்போது இந்த மநாட்டின் மூலமாக ஐந்தாவது கலீஃபாவை சந்திக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்து விட்டது. நான் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது சாஹிப் அவர்களின் சொற்களால் மிகவும் இன்பமடைந்துள்ளேன். அவர்கள் போர்கள், சண்டைகள் ஆகியவற்றை விட்டும் சுதந்திரமான, ஓர் அமைதி நிறைந்த சமூகத்தை நிலைநாட்டுவதை சான்றாகக் கொண்டு பேசியிருக்கிறார்கள். மேலும் தற்காப்பு என்ற பெயரில் மனித நேயத்தை விட ஆயுதங்களுக்கு முன்னுரிமை தரும் ஆட்சிகளை சாடியிருக்கிறார்கள். மேலும் நீதியையும், ஒருவருக்கொருவர் மதிப்பும் கண்ணியமும் அளிக்கின்றதையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தை நிலைநாட்டுவதற்காக பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களை ஓரிடத்தில் ஒன்று சேர்வதற்கு மிர்ஸா மஸ்ரூர் அஹ்மதுஅழைப்பு விடுத்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.''

நாம் முரண்பாடுகளால் நிறைந்து காணப்படுகின்ற ஓர் உலகத்தில் இருக்கின்றோம். மக்களின் மிகப் பெரும் எண்ணிக்கை பசி, பட்டினியின் காரணமாக மரணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், சில நாடுகள் முன்னேற்றத்தின் உச்ச நிலையை அடைந்து விட்டன. ஒரு புறம் நாம் இலட்சக்கணக்கான டன் உணவுகளை கடலில் வீசிக்கொண்டிருக்கின்றோம்; மறுபுறம் இலட்சக்கணக்கான மக்களுக்கு மிகவும் கஷ்டப்பட்டு ஏதோ கொஞ்சம் உண்ணக் கிடைக்கிறது. இவ்வாறு கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை ஒரு பக்கம் அதிகமாகின்ற அதே நேரத்தில் மறு பக்கம் சமூகத்தின் சிலர் மிகவும் ஏழையாகி விட்டனர். எனவே போரை நிறுத்தக் கூடிய, அமைதியை விரும்புகின்ற ஓர் உலகத்தை நிலைநாட்ட வேண்டிய தேவை இருக்கிறது. அந்த உலகம் அனைவரையும் அழைத்துக் கொண்டு செல்லவேண்டும்; அநீதிக்கு எதிராக நிற்க வேண்டும்; சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்.

ஆக, இதுதான் நான் அங்கு எடுத்து வைத்த சில கருத்துகளாகும். அல்லாஹ் உலகத்தை தன்னைப் படைத்தவனின் பக்கம் திரும்ப வைப்பானாக. இறைவனைப் புரிந்து கொள்வதன் மூலமாகவே நமக்கு முன்னால் நிற்கின்ற நாசத்திலிருந்து நாம் தப்பிக்க முடியும். இதைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது உரைகளில், எழுத்துகளில் மீண்டும் மீண்டும் எச்சரித்துள்ளார்கள்.

அது மட்டுமின்றி, இன்று நான் மீண்டும் ஒருமுறை பாகிஸ்தானின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு துஆவுக்காக கூற விரும்புகிறேன். தீமையை விரும்பும் மக்களிடமிருந்து அல்லாஹ் அந்த நாட்டைக் காப்பானாக. அஹ்மதிகளையும், அமைதியை விரும்புகின்ற, இந்த குழப்பம், சோதனையிலிருந்து தப்பிக்க விரும்புகின்ற, அந்த தீமையில்பங்கு பெறாத அனைவரையும் அல்லாஹ் பாதுகாப்பாக வைப்பானாக. அவ்வாறே சிரியாவிற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அங்கேயும் அஹ்மதிகளை பாதுகாப்பாக வைப்பானாக. சில நாட்களுக்கு முன் ஓர் அஹ்மதி காரணமின்றி சிறையிலடைக்கப்பட்டுள்ளார். அல்லாஹ் எல்லா அஹ்மதிகளையும் பாதுகாப்பானாக. பொதுவாக உலகத்திற்காகவும் துஆ செய்யுங்கள். தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலைமைகளிருந்து உலகம் போரின் பக்கம் மிக விரைவாக முன்னே சென்று கொண்டிருப்பதாகத் தெரிகிறது. போர் நடைபெற்றால், எப்படிப்பட்ட பயங்கரமான நிலை உருவாகும் என்பதை சில பெரிய அரசாங்கங்கள் புரியவில்லை. உலகம் முற்றிலும் அழிவின் விளிம்பில் நிற்கின்றது. நாம் அவர்களுக்காக அதிகமாக துஆ செய்வது நமது கடமையாகும்.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad***